**Starting time 11.48 A.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.234/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 12.06.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சுசீலா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** தாவா சொத்து கிராம நத்தம் நிலம் என்றால், ஆமாம். அதன் புல எண். 163/3 என்றால், ஆமாம். அதன் நீளம், அகலம் என்ன என்றால், நீளம் 65, அகலம் 11-1/2. மேற்படி சங்கதியை நான் எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 ன் படி மூக்கப்படையாட்சி மகன் மருத முத்துப்படையாட்சி, சுப்ரமணி மனைவி சுசீலா, மற்றும் 1 ஆம் பிரதிவாதி ஆகியோருக்குதான் பட்டாபடி பாத்தியப்பட்டது என்றால், ஆனால் அதில் 5 பேருக்கு பாகம் உண்டு.

2. 5 நபர்களுக்கு பாத்தியம் உண்டு என்பது சம்மந்தமாக ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால், கொடுத்துள்ளேன். என்ன ஆவணம் கொடுத்துள்ளேன் எனறால், பட்டா கொடுத்துள்ளேன். அந்த தோராய பட்டா 1991 ல் கொடுக்கப்பட்டது என்றால், ஆமாம். நான் கொடுத்துள்ள பட்டாவின் 3 பெயர்கள் தான் உள்ளது என்றால், ஆனால் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. மூக்கப்படையாட்சி, ராமசாமி படையாட்சி,

கிருஷ்ண படையாட்சி, பொன்னுசாமி படையாட்சி, அழகப்படையாட்சி. அழகப்படையாட்சி மருமகள் தான் நான்.

3. வா.சா.ஆ.3 ல் மேற்படி 5 பேர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால், எனக்கு அதில் 3 பாகம் மற்றவர்களுக்கு 3 பாகம். 5 ல் 3 பாகம் எனக்கு பாத்தியம் என்பதை காட்டுவதற்கு அந்த பட்டாவிலோ அல்லது வேறு ஆவணமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். அவ்வாறு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

4. வா.சா.ஆ.3 தேதியிலிருந்து இந்த வழக்கு போடும் வரை விடுபட்டு போய்விட்டது என கூறி 5-ல் 3 பாகம் எனக்கு பாத்தியப்பட்டது என வருவாய் துறையினரிடம் ஏதேனும் மனு கொடுத்தேனா என்றால், இல்லை. வா.சா.ஆ-3-ன் படி 3 ல் 1 பாகம் தான் சொத்தில் எனக்கு பங்குண்டு என்றால், சரியல்ல. அதை ஒப்புக் கொண்டதால் தான் இதுவரையிலும் வருவாய் துறையில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல.

5. வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி மூக்கபடையாட்சி மகன் மருத முத்துப்படையாட்சி 1 பாகமும், 1 ஆம் பிரதிவாதிக்கு ஒருபாகமும், எனக்கு ஒரு பாகமும் பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. மருதமுத்து படையாட்சிக்கு இரு மகன்கள் என்றாலும், அவர்கள் மணி மற்றும் ராஜேந்திரன் என்றால், சரிதான் அதில் மணியை மட்டும்தான் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், அவருக்கு மட்டும் தான் அதில் பாகம்.

6. மூக்கப்படையாட்சி, ராமசாமி படையாட்சி, கிருஷ்ண படையாட்சி, பொன்னுசாமி படையாட்சி, அழகப்படையாட்சி ஆகிய ஐவரும் தாவா சொத்தை புழக்கடையாக பயன்படுத்தி வந்தார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், 3 பாக கிரய பத்திரத்தை கொடுத்துள்ளேன். வா.சா.ஆ-2 தான் இதனுடைய கிரய பத்திரம் என்றால், ஆமாம்.

7. அந்த பத்திரத்தில் தாவா சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால்,

காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2-ல் தாவா சொத்துக்காட்டப்படவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2-ல் தாவா சொத்திற்கு வடபுறமும், தென்புறமும் உள்ள சொத்துக்கள் தான் காட்டப்பட்டுள்ளது என்றாலும், தாவா சொத்து காட்டப்படவில்லை என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.2ன் அடிப்படையில் தாவா சொத்தில் 5ல் 3 பங்கு கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல.

8. வா.சா.ஆ-1 ஆவணத்தின் படி கிருஷ்ணபடையாட்சி மனைவி தெய்வாணை என்பவர்தான் பொன்னுசாமி படையாட்சி மற்றும் அழகப்படையாட்சியிடமிருந்து சொத்தை வாங்கினார் என்றால், சரிதான். தாவா சொத்திற்கு வடபுறத்தில் உள்ள நான் ரைஸ் மில் வைத்துள்ள இடம் தான் வா.சா.ஆ-1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அதில் புழக்கடையும் உள்ளது.

9. வா.சா.ஆ.1-ல் புழக்கடையின் நீளம், அகலம் சொல்லப்படவில்லை என்றால், சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு எதுவும் சொல்லப்படவில்லை என்றால், சொல்லப்பட்டுள்ளது. தாவா சொத்தில் 812-1/2 ச.அடி நிலத்தை வா.சா.ஆ.1ன் மூலம் கிரயம் பெற்றதாக நான் என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருப்பது தவறு என்றால், சரியல்ல.

10. எனவே 5ல் 3 பாகம் எனக்கு உரிமையானது என்று நான் கூறுவது தவறு என்றால், சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தையும் தன்னுடைய சொத்தையும் சேர்த்து 30 வருடங்களுக்கு முன்பாகவே கடக்கால் போட்டுள்ளார் என்றால், சரியல்ல. 19.11.2019 தேதியன்று எங்களுடைய பாகத்தையும் சேர்த்து கடக்கால் போட்டபோதுதான் நாங்கள் இநத் வழக்கு போட்டோம்.

11. நான் கூறுவது போல எதுவும் நடைபெறவில்லை என்றாலும், 30 வருடங்களுக்கு முன்பாகவே கடக்கால் போட்டது எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ஸ்-ஆம் பிரதிவாதிக்கு 271 ச.அடி நிலத்தை தாவா சொத்தில் கிரயம் செய்து கொடுத்துள்ளனர் என்றால், அது

தவறு. அவர்களுக்கு 162-1/2 ச.அடி தான் சொந்தமானது. அவர்களுக்கு 162-1/2 ச.அடி தான் பாத்தியம் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், கொடுத்துள்ளேன். அவ்வாறான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

12. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 1991க்கு முந்தைய ஆவணங்கள் என்றாலும், அந்த ஆவணங்களின் படி எனக்கு 5-ல் 3 பங்கு பாத்தியம் இருந்திருந்தால் அதன்படி பரிகாரத்தை வழக்கில் கோரியிருப்பேன் என்றால், சரியல்ல. அது 5 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தை பொறுத்த வரையிலும் 3ல் 1 பங்குதான் எனக்கு பாத்தியப்பட்டது என்றாலும், 5-ல் 3 பங்கு பாத்தியம் இல்லை என்றாலும் சரியல்ல.

4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.12 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**